# தெய்வத்தின் குரல்

## மார்கழி மகத்துவம்

நம: பார்வதீ பதயே ஹரஹர மஹாதேவ

கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்த கோவிந்த

மார்கழி மாசம் ரொம்ப முக்கியமான மாசம். அப்பதான் இப்ப நமக்கு வெடிகாலம்பற மாதிரி ஒரு வருஷத்த ஒரு நாளா வெச்சிண்டா, அந்த மார்கழி மாசம்ங்கறது உத்தராயணத்தினுடைய இதுக்கு முன்னோடே இந்த தை மாசத்துல உத்தராயணம். உத்தராயணத்துக்கு முந்தி உதய, உதயமாற காலம் உத்தராயணம். ஒரு வருஷத்த நாளா வெச்சிண்டா உத்தராயணம் தான் உதயமாகற காலம். அந்த உதயமாகற காலத்துக்கு முன்னோட தான் உஶக் காலம்னு வெடியற் காலம்னு பேரு அதுக்கு. வைகறைனு பேர் தமிழ்ல. அந்த வைகறையில், “வைகறையில் துயில் எழு”னு சூரியோதயத்துக்கு முந்தியே முழிச்சுண்டுடனும்னு ஶாஸ்திரம். அந்த மாதிரி அதுக்காக பள்ளி எழுச்சி அந்த காலத்துல, இருட்டா இருக்கற காலத்துலேயே. ஆனைசாத்தான்னு ஒரு பக்ஷி. அந்த ஆனைசாத்தான் சத்தம் கேட்டுடுத்து, அதனால எழுந்திரு, எழுந்திருனு சொல்ற வழக்கம். கீச்சு, கீச்சு என்றுனு அந்த கீச்சு, கீச்சுனு சத்தம். மூணு மணி, மூண்றை மணி நால்றை மணிக்கு கேட்டா ஒரு கீச்சு, கீச்சு, கீச்சு, கீச்சுனு ஒரு பக்ஷி. அதுக்கு அப்பறமும் இருக்காது, அதுக்கு முந்தியும் இருக்காது. சரியா அந்த மணிக்கு ஆரம்பிச்சிடும் அது. அதனால நாலு மணிக்கு ஒரு பக்ஷி, அப்புறம் அஞ்சு மணிக்கு ஒரு பக்ஷி, அதுக்கு அப்புறம் ஆறு மணிக்கு ஒரு பக்ஷி. அப்புறம் அஞ்சே முக்கால் ஆயிட்டுதானா காக்கா கத்தறது ஆரம்பிச்சிடும். அதுக்கு முந்தி

கோ, கோழி கத்தும். அதுக்கு முந்தி ஆனைசாத்தான். அதுக்கு முந்தியே ரெண்டரை மணி, மூணு மணிக்கே ஒரு பக்ஷி ஆரம்பிச்சிடும், அதிலேர்ந்து. அதுக்கு முந்தி எல்லாம் ஆந்தையும் கோட்டானும் தான் அதுக்கு முந்தி பன்னண்டு மணிக்கு வரைக்கும் முந்தி. ஒவ்வொரு காலத்துக்கும் அத கணக்கு வெச்சிண்டு அந்தந்த பக்ஷிகள் கத்திண்டிருக்கு, ஒரே கணக்கா கத்திண்டிருக்கு அது. ஆக நமக்கு தான் வாழ்க்கை முறை கண்டபடி இருக்கிறதுனால நமக்கு ஒரு நியமம் இல்லாமல் , எந்த காலத்துலயும் எல்லா காரியங்களையும் செய்ய வேண்டியிருக்கு நமக்கு.

அந்த மாதிரி அந்த திருவெம்பாவைனும் திருப்பாவைனும் இருந்த ஒரு பக்ஷத்துக்கும் நம்ப நாட்டுல திருவெம்பாவை, திருப்பாவை ஏற்படறதுக்கு முந்தியே பிடிச்சு அந்த மார்கழி மாசத்துல காலமே நீராடி, மார்கழி நீராடி, பகவான நாம் ஸ்மரிச்சு அம்பாள ஸ்மரிச்சு அந்த மாதிரி ஒரு ஸ்நானம் பண்ணிண்டு அம்பாளுக்கு பூஜை பண்ணின்டிருக்கும்படியான பழக்கம் நம்முடைய தமிழ் நாட்டுல இருந்திருக்குனு தெரியறது. தமிழ் நாட்லிருந்தத்துனுடைய வாசனை எல்லா நாட்டுலயும் இருந்திருக்கும்னு தெரியறது. மலையாளத்துல நிச்சயமா இருக்கு. இன்னிக்கும் இருக்கு. வட நாட்டுலயும் இருந்ததாக யமுனை கரையில இருந்ததாக பாகவதத்தில எழுதியிருக்கு. ஆகையினால வட நாடு முழுக்க இருந்ததோ இல்லியோ பாகவதத்தில மாத்திரம் யமுனை கரையில, இந்த ஆயர் பாடியில் இருந்ததாக மாத்திரம் எழுதியிருக்கு.அதனால அந்த மாதிரி இப்ப மார்கழி மாசம் வரதுனால குழந்தைகள் எல்லாரும் இந்த ரெண்டு பாடலையும் , இன்னிலேர்ந்து அதெல்லாம் கொஞ்சம் குழந்தைகளுக்கு எல்லாம் நெட்ரூப் பண்ணி வைச்சு கொஞ்சம் ஸங்கீதம் கொஞ்சம் கானத்தோட குழந்தைகளுக்கு நெட்ரூப் பண்ண வைச்சு காலை வேளையில முடிஞ்சுதானா இப்போ கண்ட எடத்துல போய் ஸ்நானம் பண்றதுக்கு உடம்பு அசௌகரிய**மா இருந்தா** கூட கொஞ்சம் வெடியறதுக்கு முந்தி வென்னீரிலியாவது ஸ்நானம் பண்ணி கொஞ்சம் இந்த

பாடல்களை நாம், ஏனா இந்த  காலத்துல அனுசரிச்சு உடம்புக்கு அநேக வியா... சைகளும் அஶக்தியும் ஶக்தியில்லாம போயிடறது இந்த காலத்துல. அதனால சட்டுனு இப்போ எல்லாம் போய் தண்ணீல முழுகுனா அதுனால ஜ்வரம் வந்துதானா, அந்த தோஷம் நம்ம, நம்மச் சேரும் குழந்தைகளுக்கு. ஆகையினால வென்னீரிலியாவது வெடியறதுக்கு முந்தி முழுகி, இந்த பாடல்கள்ளாம் குழந்தைகளுக்கு சொல்லி வெச்சு அங்கங்க பத்து வீடு,  அந்த தெருவு அப்படியே சுத்திண்டு வரும் படியாக செய்தா  நமக்கு அம்பாளுடைய அநுக்ரஹமும் கிடைக்கும்.

எதுக்காகவோ அந்த ஒரு மார்கழி மாசம் உஶக் காலத்துல வெடிகாலம்பற எழுந்து நல்ல காரியம் செய்தோமானா அது எப்பவும் அப்படியே மனசுல அப்படியே ஸ்திரமா இருக்கும் அது. படிக்கிறது கூட வெடிகாலம்பற படிச்சோமானா ராத்திரி எவ்வளவு படிச்சா கூட அது ஞாபகம் இருக்கிறது இல்லை. வெடிகாலம்பற படிக்கிறது அப்படியே பதியறது. அந்த மாதிரி ஈஸ்வர பக்தியும் ஈஸ்வர தியானமும் கூட வெடி காலம்பற செஞ்சோமானா அது அப்படியே படியும். ஏனா அதிலியும் வெடிகாலம்பற, தேவதைகளுக்கு வெடி காலம்னு பேர். தேவ லோகத்துக்கு ஒரு வருஷம், ஒரு மா, ஒரு நாள்ங்கற கணக்கு படி உத்தராயணம்ங்கறது உதயமா இருந்ததுனா,அதுக்கு முந்தி உஶக் காலம்ங்கறது இந்த மார்கழி மாசம்.தேவதைகளுடைய ஒரு உஶக் காலம் நம்ப உஶக் காலம் ரெண்டும் சேரும் மார்கழி மாசத்துல உஶக் காலத்துல. ஆகையினால அந்த காலத்துல நம்ப **செய்தோமானா** ஒரு த்ரிலோகங்களுக்கும் உஶக் காலமா இருக்கு அது. அந்த காலத்துல குழந்தைகள் எல்லாம், இந்த ஒரு நம்முடைய நாட்டுக்கு சொந்தமான பாடல் இது.

ஆகையினால இந்த பாடல் வரதுக்கு முந்தியே பிடிச்சு நடந்துண்டிருக்குனு தெரியறது, நிச்சயமா. பாகவதத்துல இருக்கிற வாக்கியத்துனாலயும் அம்பாவாடல்னு ஸங்க நூல்கள்ள இருக்கிற வாக்கியத்துனாலயும், அதுனாலத்லயும், இந்த, இந்த திருவெம்பாவை ஏற்ப்பட்டதற்கு அப்புறம், இது

ஸயாம் வரைக்கும் கூட ஓடிப்போயிருக்குனு தெரியறது. இன்னிக்கும் நடத்திண்டிருக்கா அந்த ஸயாம்ல, அர்த்தம் தெரியாம அந்த திருப்பாவைய மாத்திரம் சொல்லிண்டிருக்கா. எனக்கு கூட அபிப்ராயம் யாரையானு அனுப்பிச்சு , அதில எவ்வளவு பாட்டு இருக்கு, ஒரு பாட்டு தான் இருக்கா, அவன் தான் த்ரிம்பா, ட்ரிம்பாவாய்னு எழுதி இருக்கான் அவன் TRIYAMBAAVAI னு எழுதி இருக்கான், English ல எழுதறப்போ. அதனால எவ்வளவு பாட்டு இருக்கு என்ன இருக்குங்கறத கொஞ்சம் பார்த்து , அது**க்கு** யாருக்கானும் அர்த்தம் தெரிஞ்சவா இருக்காளா அவா, ஏனா எவ்வளவு பாட்டு இருந்தாலும் அந்த பாட்டுக்கும் நம்ம இப்போ திருவெம்பாவை இருக்கறதுக்கும் ஏதானு ஒற்றுமை இருக்காங்கறதையும் ஆராய்ச்சி செய்யணும்னு அபிப்ராயம். அதான் சில பேர் போயிருந்தா, சில அவாள்ண்ட கூட சொன்னேன். சந்தர்ப்பபப்படல. அதனாலே தனியாவே போய் பார்த்துண்டு வரணும்னு உத்தேசம். அது பார்ப்போம்.

அதெல்லாம் ஆராய்ச்சி விஷயம், நாம இங்கியும் மங்கிப் போகாம நாம் செய்ய வேண்டியது , அந்த மாதிரி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலயும் இருக்கிற குழந்தைகளுக்கு , நா அதுக்கு வேண்டிய புஸ்தகங்கள்ளாம் அச்சு போட சொல்லிருக்கேன். அதனால நா அதை அச்சு போடும் போது எத்தனை பள்ளிக்கூட வாத்தியார்கள் எல்லாம் அதில ஸங்கீதம் சொல்லிக்குடுக்கற வாத்தியார்கள்ளாம் , குழந்தைகள் எவ்வளவு குழந்தைகள் இதுல ஆசை படறதுனு தெரியறதோ , அந்த குழந்தைகள்ளா வந்து ஆசை பட்டு புஸ்தகம் வேணுமானா எல்லாருக்கும் அச்சு போட்டு குடுக்க சொல்லி இருக்கேன். ஆகையினால அச்சு போட்டுறேன் அதை. போட்டு அந்த பள்ளிக்கூட வாத்தியார்கள் அவாளுக்கு குடுத்து அதுல ஒரு பத்து குழந்தைகளோ இருவது குழந்தைகளோ , நூறு குழந்தைகளோ அங்கங்க ஒரு பத்து வீட்டுக்கு போயிட்டு அந்த பாட்டுகள சொல்லிண்டு அங்கேர்ந்து திரும்பியும் வீட்டுக்கு வந்து செஞ்சா அது ஒரு விசேஷம்னு எனக்கு தோணித்து. அதுக்கப்புறம் அதுக்கு, அதப் பற்றி ஒரு

அர்த்தம் அர்த்தம் அவாளுக்கு சொல்றது , கொஞ்சம் பத்து பேர் சேர்த்து கூட்டம் கூடி, கொஞ்சம் தமிழ் புலவர்களா இருக்கிறவர்களுக்கு , கொஞ்சம் அதுக்கு அர்த்தம் சொல்றவா படித்தவர்கள் இருந்தாள்னா அவாளக் கொண்டு அர்த்தம் சொல்லி அந்த மாதிரி இந்த ரெண்டும் நமக்கு, இந்த பழக்கமும் அநாதியா ஏற்பட்டிருக்கு. அதுக்கும் ரெண்டு ஒரு ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியே , இந்த ரெண்டு புஸ்தகமும் ஏற்பட்டுப் போச்சு, திருப்பாவை,திருவெம்பாவைனுட்டு. இது ரெண்டையுமே குழந்தைகள் எல்லாம் சொல்லி, அதைத் தவிர மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சினு அது வேற ஒரு பத்து பாட்டு அவர் எழுதி வை வெச்சிருக்கார். அது ஆவுடையார் கோயில் க்ஷேத்ரத்ல எழுதினது. ஆவுடையார் கோயில்ங்கறது அறந்தாங்கி தாலுக்கா, தஞ்சாவூர் ஜில்லாவுல அறந்தாங்கி **தாலுக்கா**வினுடைய தென்கோடியில இருக்கிற பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் நடுவுல எல்லைல இருக்கிற க்ஷேத்ரம் அது. அது ஆவுடையார் கோயில்ல திருப்பள்ளியெழுச்சியிக்க திருப்பெருந்துறையூர் உறை ஶிவனேனு அந்த திருப்பள்ளியெழுச்சில . திருப்பெருந்துறைனு பேர், ஆவுடையார் கோயிலுக்கு அந்த எடத்துக்கு . இது வந்து திருவண்ணாமலைல எழுதினது, இந்த திருவெம்பாவை. ஸ்ரீவில்லிபுத்தூர்னு இருக்கு திருநெல்வேலி ஜில்லாவுல. இப்ப ராமநாதபுரம் ஜில்லா, திருநெல்வேலி ஜில்லாவுல , அந்த அங்கங்க ஆண்டாள் எழுதினது திருப்பாவைங்கறது, கிருஷ்ண பரமாத்மாவைப் பத்தி அவ எழுதினது.

ஆகையினால இந்த மார்கழி மாசம் வரத்துனால , அங்கங்கே இருக்கும்படியான பள்ளிக்கூடங்கள்ள குழந்தைகளுக்கெல்லாம் சொல்லி வெச்சி, அதனால அந்த குழந்தைகள்ள எத்தன குழந்தைகளுக்கு ஆசையிருக்கோ, எத்தன புஸ்தகம் வேணுமோ, அவாள்ளாம் மடத்துக்கு எழுதிண்டா, எழுதிக்கறதோ, கேட்டுக்கறதோ, எழுதி கடிதாசி கொண்டு வந்து கொடுத்துட்டா தனியா அவ்வளவு புஸ்தகத்தை அவாளுக்கெல்லாம் கொடுத்து ஏற்பாடு பண்ணிப்படறேன். அந்த மாதிரி பண்ணி, இந்த மார்கழி

மாசத்துல நல்ல காரியம் செய்து, பகவானுடைய அநுக்ரஹம் உலகத்துக்கெல்லாம் ஏற்படும்படியாக  அவாளுக்கு முடிஞ்சவா அந்த காரியத்தை பிரயத்னம் பண்ண வேண்டியது.

**நம: பார்வதீ பதயே ஹரஹர மஹாதேவ**

**கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்த கோவிந்த**